அந்த நல்லெண்ணத்தோடு இந்த அவையிலே அதுகுறித்து அறிவிக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

9. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) பேரவை நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)ன் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ.) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

107. சென்னையிலுள்ள சென்னை பெட்ரோலியம் நிறுவனத்திற்கு மின்மாற்றி எண்ணெய் வழங்கல் இருப்பு விற்பனையின் மீது சென்னையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 400 கிலோ லிட்டர் மின் மாற்றி எண்ணெய் விற்பனை செய்வதன் மீது சென்னை பெட்ரோலியம் நிறுவனமும் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 19-5-1981ஆம் தேதியிடப்பெற்ற 536ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

108. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உணவு—பான வகைகள் நீங்கலான வற்றின் விற்பனையின் மீது யாதொரு ஓட்டல் அல்லது உணவகம் செலுத்தத்தக்க வரிய்